**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 172/2019 |
| Name | : Marimuthu |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **27.02.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 19.03.2016 ம் தேதி நான் உடுமலை அரசு மருத்துவமனையில் நான் முறைப் பணியில் இருந்த போது மடத்துக்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளரின் வேண்டுகோளின் படி மகாபிரபு (வயது 19) என்ற நபரின் பிரேதத்தை பரிசோதனை செய்தேன். பரிசோதனையில் அவரது கால் மற்றும் கைகளில் விரைப்புத்தன்மை இருந்தது. உடல் இருபுறமும் சீராக இருந்தது. தோல் மற்றும் கண் பகுதி கருப்பாக இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள்

1. 2 செ.மீ அளவிலான தையலிடப்பட்ட காயம் அவரது தாடையில் காணப்பட்டது

2. சிறு, சிறு அளவிலான சிராயப்பு காயங்கள் வலது பக்க கழுத்தில் காணப்பட்டது

3. சிறு, சிறு அளவிலான சிதைந்த காயங்கள் அவரது நெற்றியில் காணப்பட்டது

4. 2*1 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் வலது மணிக்கட்டில் காணப்பட்டது

5. கீழ் தாடை எலும்பு உடைந்து ஆடிக்கொண்டிருந்தது

6. இமைகள் மூடியவாறு இருந்தது

7. கீழ்பகுதி பற்கள் ஆடிக்கொண்டிருந்தது

8. மார்பு பகுதி நன்றாக இருந்தது

9. இதயம் 300 கிராம் எடையுடன் இருந்தது, நுரையீரல் வலது புறம் இடது புறம் 450 கிராம் வெளிறிய நிறத்தில் இருந்தது

10. இரைப்பையில் 500 மி.லி பழுப்பு நிற திரவம் இருந்தது

11. நாவடி எலும்பு உடைந்திருந்தது

12. கல்லீரல் 1400 கிராம் எடையுடன் வெளிறிய நிறத்தில் இருந்தது

13. மண்ணீரல் 170 கிராம் எடையுடன் வெளிறிய நிறத்தில் இருந்தது

14. சிறுநீரகங்கள் ஒவ்வொன்றும் 130 கிராம் வெளிறிய நிறத்தில் இருந்தது சிறுநீர் பை காலியாக இருந்தது

15. கபாலத்தை பரிசோதித்த போது மூளை எடை 1000 கிராம் இருந்தது. மூளை சவ்வு கிழியவில்லை நன்றாக இருந்தது

16. தண்டுவடம் நன்றாக இருந்தது

இறந்து போனவர் அவருக்கு ஏற்பட்ட தாடை எலும்பு முறிவினாலும், தொண்டைப் பகுதியில் ஏற்பட்ட காயத்தினாலும் அதனால் ஏற்பட்ட மூச்சு திணறலினாலும் இறந்திருக்கக்கூடும் என்று சான்று வழங்கினேன். **நான் வழங்கிய பிரேத பரிசோதனை**

**அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இரைப்பையில் காணப்பட்ட பழுப்பு நிற திரவம் என்ன என்றால் நுரையீரலில் வெளியேறிய திரவம். அது ரத்தம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான் நேரம் ஆக ரத்தத்தின் நிறம் மாறும்.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.27 17:26:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்